1971 டிசம்பர் 9]

நிறுத்தி வைத்துவிட்டு, அந்த வழக்கை பைசல் செய்வதில் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் அதிக நேரம் காக்கவைத்து விட்டார்கள். இதனால் பிரயாணிகளுக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டது. இவற்றைத் தடுக்கும் வகையில். அந்த பஸ்ஸினுடைய கண்டக்டர் டிரைவரை மாத்திரம் நிற்கவைத்து விட்டு அந்த பஸ்ஸை போகச் சொன்னால் நல்லது என்று கருதுகிறேன். அரசு அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பஸ்களுடைய கண்டக்டர், டிரைவர்களை நிற்க வைத்து விட்டால் பஸ்ஸும் நிற்கவேண்டியதுதான் இருந்தாலும் இதுபோன்ற குற்றங்கள் போக்குவரத்து அதிகமாக உள்ள நகரங்களில் ஏற்படுவது சகஜம்தான். இருந்தபோதிலும், வழக்குகளை விரைவாகவும், வேகமாகவும் முடிவு செய்ய ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம்.

நாராயணக்காவேரி கால்வாயில் அணை

* 206 வினா—**திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் சயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், நாராயணக்காவேரி கால்வாய்க்கு அணைக்கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், மேற்படி திட்டம் எப்போது செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ & (இ). இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்தில் நாராயணக் காவேரி கால்வாய்களைச் சீரமைக்க ரூ. 10.25 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் விரிவான ஒரு திட்டத்திற்கு 1963-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மூன்று பிரிவுகளில் வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. மற்ற இரு பிரிவுகளில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அணைக்கட்டு, தலைமதகுகள் ஆகியவற்றின் கட்டுமான வேலை எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைசாமி: தலைவர் அவர்களே, நாராணயக்காவேரி சம்பந்தமாக டெண்டர் விட்டும், இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. இந்தச் சுணக்கத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அநேகமாக இந்தத் திட்டம் சம்பந்தமான வேலைகள் முடிவுறும் நிலையில் இருக்கிறது. அணைக்கட்டு வேலையைப் பொறுத்தவரையில், ரூ. 6 லட்சம் அளவில் டெண்டர் அழைத்து, முடிவு எடுக்கப்பட்டவுடன் துரிதமாக வேலைகள் செய்யப்படும்.

திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைசாமி: தலைவர் அவர்களே, இந்த நாராயணக்காவேரியிலிருந்து பிரிவுக் கால்வாய்கள் மராமத்து செய்ய மதிப்பீட்டில் இடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 'இம்ப்ரூவ் மெண்ட்ஸ் டு டாங்க்ஸ்' என்ற வகையில் ரூ. 2,50,000 ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதில் இவையெல்லாம் வரும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்தத் திட்டம் 63-லேயே அமைக்கப்பட்டும், இப்பொழுதுதான் டெண்டர் அழைத்து இருக்கிறார்கள். இராமநாதபுரம் பின்தங்கிய மாவட்டம் என்பதால் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இருந் தாலும், எட்டு வருஷக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது துரிமாக வேலைகளைச் செய்து, அந்த பின்தங்கிய மக்களுக்கு வாழ்வளிக்க அரசாங்கம் முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இராமநாதபுரம் முன்னேற்றத்தில் உறுப்பினர் அக்கறை காட்டுவது பாராட்டத் தக்கது. காலதாமதத்திற்கு நாங்கள் அல்ல, ஏற்கனவே இருந்தவர்கள்தான் பொறுப்பாளிகள். நம்முடைய அரசு வந்தபிறகு துரிதமாக வேலைகள் எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் இருக்கிறது.

Air Port near Tuticorin

* 207 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to press the Union Government to locate an Air-Port near Tuticorin in Tirunelveli district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) திருநெல்வேலி மாவட்டத்தில் விமானத் தளம் ஒன்றை அமைப்ப தற்கான அவசியத்தை இவ்வரசு முன்னரே மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளது. மேலும், தூத்துக்குடிக்கு விமானப்போக்கு வரத்துக்கான குறைந்த அளவு போக்குவரத்து வாய்ப்புக்கு இவ்வரசு உத்தரவாதமும் அளித்துள்ளது. ஆனால், திட்டத்தின்கீழ் ஏற்படும் நிதிப்பற்றுக்குறையினால் இத்திட்டத்தை இன்னும் சிறிது காலம்வரை எடுத்துக் கொள்வதற்கில்லையென மத்திய அரசு தெரிவித்துள்ளது ஆயினும், இத்திட்டத்தை பரிசீலிப்பதற்குத் தேவையான ஆய்வுகள் (Survey) மத்திய உள்நாட்டு விமானத்துறை இயக்குநராலும், இந்திய வான்வழி நிறுவனத் தாலும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே. கன்னியாகுமரியில் ஒரு ஏர் போர்ட் அமைக்க மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.